FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348085

1 District மாவட்டம் கிருஷ்ணகிரி PS காவல்நிலையம் ஓ.சூ.க.மரிவு Year ஆண்டு 2026 FIR No. முத.அ எண் 08/nc/2026 Date நாள் 24.07.2026

2 (i) Act சட்டம் உபா சட்டம் 1967, Sections பிரிவுகள் 7 (a)

(ii) Act சட்டம் வெடி பொருள் சட்டம் Sections பிரிவுகள்

(iii) Act சட்டம் சட்டம் 2018. Sections பிரிவுகள்

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்

3 (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 17.07.2026 மாலை 12.30 மணி Date to நாள் வரை : 23.07.2026 காலை 14.30 மணி

Time Period நேர அளவு Time from நேரம் முதல் : Time to நேரம் வரை :

(b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 24.07.2026 Time நேரம் : 11.30 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral / Electronic form : இணையம் மூலம் புகார் செய்யப்பட்டது.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 45 கி.மி, வடக்கு.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : ஏரகூர் பஞ்சாயத்து-1, உதவி ஆணையர் அலுவலகம், முகவரி ஏரகூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த காவல் நிலைய பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : A. நம்பி
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்

(b) Father's/ Husband's Name : அண்ணாமலை
தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 75/2026 (d) Nationality : இந்தியன்
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம்

(e) Passport No. : –
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : – Place of Issue : –
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Indo German Tools - நிறுவனத்தின் உரிமையாளர் (g) Address : D.NO. 2/697, M.M. நகர், மூக்கனாண்டப்பள்ளி, ஏரகூர் பஞ்சாயத்து, கிருஷ்ணகிரி மாவட்டம்.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. இளையராஜன், உதவி ஆணையர், ஏரகூர் பஞ்சாயத்து-1, உதவி ஆணையர் அலுவலகம், ஏரகூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

–

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிணவிசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

அபராதம் தண்டனைகளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the investigation / Refused Investigation / transferred to PS ..... on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முதல்தகவல் சுருக்கம் பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்பட்டதன் பேரில் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / அதிகாரமற்ற எல்லைக்குட்பட்ட புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஒத்துக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

24/07/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

24.07.2026 at 12.40 hrs

Name: பெயர் S. ராஜ
Rank: நிலை ..... No: எண்

காவல் ஆய்வாளர்,
I/C S.S. புரம்,
திருநெல்வேலி

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 8/AC/2026, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.

இன்று 24.07.2026 ம் தேதி காலை 10.30 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், மூக்கொண்டப்பள்ளி, எம்.எம்.நகரை சேர்ந்த அண்ணாமலை மகன் திரு.A.நம்பி என்பவர் அலுவலகத்திற்கு நேரில் வந்து எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புதல்: A.நம்பி, வயது-75, த/பெ. அண்ணாமலை, க.எண்-2/697, எம்.எம். நகர், மூக்கொண்டப்பள்ளி, ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுதல்: உயர்திரு.காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி. ஐயா, நான் ஒசூர், மூக்கொண்டப்பள்ளி, எம்.எம் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் 1997 முதல் ஒசூர் சூசுவாடி கிராமம், அனுமேபள்ளி ஹக்ரஹாரம், கதவு எண் 2-551-7-ல் ஆட்டோமொபைல் பாட்ஸ் உற்பத்தி செய்யும் நிறுவனத்தை INDO GERMAN TOOLS என்ற பெயரில் நடத்தி வருகிறேன். அதன் GSTIN 33ABNPN2541D1ZY. நான் நிறுவனத்திற்காக கொள்முதல் செய்யும் raw materials மற்றும் அதற்கான காப்பீடு ஆகியவற்றை ஒவ்வொரு வருடமும் சரியான முறையில் Income tax returns-ல் file செய்து வருகிறேன். கடந்த 2022-23-ஆம் நிதியாண்டில் நிறுவனத்திற்கு கொள்முதல் செய்த பொருட்கள் மற்றும் நிறுவனத்தின் மீது உள்ள கடன்களுக்கான வட்டி ஆகியவற்றினை Income Tax returns-ல் file செய்து, கொள்முதல் செய்த பொருட்களுக்கு, நான் அரசுக்கு செலுத்திய GST-ஐ ஆடிட்டர் மூலம் கணக்கு பார்த்து, அந்த GST தொகையினை திரும்ப பெறுவது வழக்கம். அதுபோல் நான் ஒவ்வொரு வருடமும் வருமான வரி செலுத்தும் பணத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையினை திரும்ப பெறுவேன். ஒசூர் Commercial Tax அலுவலகத்திலிருந்து, ஒசூர் (வடக்கு)-1 வணிகவரி அலுவலர் திருமதி.உமாராணி என்பவர் 26.02.2026-ம் தேதி ZD330226231037U மற்றும் 27.04.2026-ம் தேதி ZD330226231037U என இரண்டு show cause notice-ஐ, எனது INDO GERMAN

TOOLS நிறுவனத்திற்கு அனுப்பினார். அதில் 2022-23-ம் நிதியாண்டில் INDO GERMAN TOOLS நிறுவனம் தாக்கல் செய்த விவர அறிக்கைகள்/வாக்குமூலங்களில் வழங்கப்பட்ட தகவல்களை ஆய்வு செய்ததில் பல்வேறு முரண்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன என்றும், SGST/CGST சட்டம், பிரிவு 73-ன் கீழ் செலுத்த வேண்டிய நிகர வரிக்காக, வரி செலுத்துபவருக்கு, செலுத்த வேண்டிய தேதியிலுருந்து பணம் செலுத்தும் வரை 18% வட்டியுடன் மதிப்பீடு செய்யப்படுகிறது என்றும், SGST/CGST சட்டம் 2017, பிரிவு 73(9)-ன் கீழ் செலுத்த வேண்டிய வரியில் 10% அபராதம் விதிக்க முன்மொழியப்பட்டுள்ளது என்றும், வரி செலுத்துபவர் உடன்படவில்லை எனில், மேற்படி அறிவிப்பை பெற்ற 15 நாட்களுக்குள், ஆவண ஆதாரங்களுடன் DRC-01A, பகுதி-B-ல் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. நான், 26.05.2026-ம் தேதி நிறுவனத்தின் 1) Reconciliation Statement of GSTR 2A and GSTR B, 2) Bills of excess claim of ITC in respect to GSTR 2A, Insurance Bill and 3) DCR-03 acknowledgement ஆவணங்களை இணைத்து வணிகவரி துறையில் இருந்து அனுப்பப்பட்ட நோட்டீசுக்கு பதில் அனுப்பினேன். அதன்பின்னர், வணிக வரி அலுவலர் திருமதி.உமாராணி அவர்கள் 03.07.2026-ம் தேதி 15.30 மணிக்கு ஒசூர் வடக்கு-1, உதவி ஆணையர் அலுவலகத்தில் (ST) ஆஜராக சொல்லி 23.06.2026-ம் தேதி எனக்கு நினைவூட்டும் கடிதம் அனுப்பியிருந்தார். என்னுடைய அலுவலகத்தில் பணிபுரியும் கணக்கர் திருமதி.G.தமிழ்செல்வி என்பவர், நான் வணிகவரி அலுவலர் திருமதி.உமாராணி அவர்களை சந்திப்பதற்காக, அட்டன்டர் திரு.ஈஸ்வரன் என்பவருக்கு போன் செய்து கேட்டுள்ளார். அதற்கு திரு.ஈஸ்வரன் திருமதி.உமாராணி மேடம் பணி மாறுதலில் சென்றுவிட்டதாகவும், புதிய அதிகாரி வந்தபிறகு பார்க்குமாறு கூறியதாக என்னிடம் தெரிவித்தார். அதன்பின்னர், வணிகவரி அலுவலகத்தில் இருந்து எந்த தகவலும் இல்லாததால் நான், அக்கவுண்டன்ட் திருமதி.G.தமிழ்செல்வி அவர்களுடன் 07.07.2026-ம் தேதி ஒசூர் வடக்கு-1, உதவி ஆணையர் அலுவலகத்திற்கு சென்று மதியம் சுமார் 12.30 மணிக்கு உதவி ஆணையர் திரு.கலையரசன் என்பவரை சந்தித்து, Show cause notice வந்தது குறித்தும், அதற்கு விளக்கம் கொடுத்துள்ள விவரத்தை தெரிவித்தேன். அதற்கு திரு.கலையரசன் அவர்கள் இன்னும் Show cause notice-க்கு பதில் வரவில்லை என்றும், வணிகவரி அலுவலர் டிரைனிங்கில் இருப்பதால் அவரிடம் பேசியபின்பு

அழைப்பதாக கூறியதால், நாங்கள் வந்துவிட்டோம். அதன்பின்னர், 17.07.2026-ம் தேதி திருமதி.G.தமிழ்செல்வி உதவி ஆணையர் அலுவலகத்தில் திரு.கலையரசன் அவர்களை மதியம் சுமார் 12.30 மணிக்கு சந்தித்து, Show cause notice-க்கு அனுப்பிய பதில் குறித்து கேட்டதற்கு, திரு.கலையரசன் INDO GERMAN TOOLS நிறுவனத்திற்கு GST சம்மந்தமாக அபராதம் விதிக்காமல் இருக்க வேண்டும் என்றால் லஞ்சமாக ரூ.50,000/- தனக்கு தனியாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். அதற்கு திருமதி.G.தமிழ்செல்வி, நிறுவனத்தின் உரிமையாளர் திரு.நம்பி சார் அவர்களிடம் தாங்கள் பணம் கேட்ட விவரத்தை தெரிவிப்பதாக கூறியுள்ளார். பின்னர் திரு.கலையரசன் ரூ.50,000/- லஞ்சம் கேட்ட விவரத்தை என்னிடம் தெரிவித்தார். பின்னர், 20.07.2026 மற்றும் 21.07.2026-ம் தேதிகளில் உதவி ஆணையர் திரு.கலையரசன் 9080382266 என்ற எண்ணிலிருந்து, எனது நிறுவனத்தின் 9842994209 என்ற அலுவலக CUG எண்ணிற்கு போன் செய்துள்ளார். செல்போனில் இருந்த மிஸ்டுகாலை பார்த்து, திருமதி.G.தமிழ்செல்வி, 22.07.2026-ம் தேதி 9080382266 என்ற எண்ணில் உதவி ஆணையர் திரு.கலையரசன் அவர்களை தொடர்பு கொண்டு பேசியதற்கு, திரு.கலையரசன் அவர்கள் நம்பி சார் அவர்களை நாளை 23.07.2026-ம் தேதி அலுவலகத்தில் வந்து தன்னை பார்க்குமாறு சொன்ன தகவலை என்னிடம் தெரிவித்தார். அதன்படி நான் 23.07.2026-ம் தேதி மதியம் சுமார் 02.30 மணிக்கு வணிகவரி அலுவலகம் சென்று, உதவி ஆணையர் திரு.கலையரசன் அவர்களை சந்தித்தபோது, உங்க நோட்டீஸை முடித்து கொடுக்க வேண்டுமானால் பணம் ரூ.1,00,000/- தனக்கு தனியாக கொடுக்க வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் திருமதி.G.தமிழ்செல்வியிடம் முதலில் ரூ.50,000/- தானே கொடுக்க சொன்னீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் 2022-23-ம் நிதியாண்டில் உங்களது நிறுவனத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட GST விவர அறிக்கைகள்/வாக்குமூலங்களில் வழங்கப்பட்ட தகவல்களில் நிறைய முரண்பாடுகள் உள்ளது என்றும், அதற்கு செலுத்தவேண்டிய தொகை அபராதத்துடன் சேர்த்து ரூ.10,00,000/- கட்டவேண்டும் என்றும் உங்க நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்க ரூ.1,00,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்றும், 24.07.2026-ம் தேதி மாலை 05.00 மணிக்கு எனக்கு போன் செய்வதாகவும், அப்போது அவர் கேட்ட பணத்தை, அவர் சொல்லும் இடத்திற்கு சென்று கொடுக்கவேண்டும் என்றும் கண்டிப்புடன் தெரிவித்தார். எனது நிறுவனத்தின் GST

சம்மந்தமான முரண்பாடுகளை சரி செய்ய, உதவி ஆணையர் திரு.கலையரசன் அவர்கள் என்னிடம் லஞ்சமாக கேட்கும் பணம் ரூ.1,00,000/- கொடுக்க எனக்கு விருப்பமில்லை. உதவி ஆணையர் திரு.கலையரசன் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.1,00,000/-த்துடன் அவர் சொல்லும் நேரத்தில், சொல்லும் இடத்தில், அவரை சந்திக்க தயாராக இருக்கிறேன். என்னிடம் லஞ்சம் கேட்ட ஒசூர் வடக்கு-1, உதவி ஆணையர் திரு.கலையரசன் என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) A.Nabmhi

Sir, a computer typed complaint received by me on 24.07.2026 at 10.30 hrs. Further a confidential verification on the general reputation of the accused Tr.Kalaiarasan has been made and learnt to be not good. The motive and antecedents of the complainant have been checked carefully and found nothing adverse. Therefore, a case in Krishnagiri V&AC Cr.No.8/AC/2026 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC Amendment Act, 2018 was registered today on 24.07.2026 at 11.30 hrs against the accused Tr.Kalaiarasan, Assistant Commisioner (ST), Hosur North-1, Hosur, Krishnagiri District. The original FIR along with this computer typed complaint was sent to the Hon'ble Court of Principal District/Session Judge, Krishnagiri and remaining copies were sent to the officers concerned.

24/07/2026
Inspector of police
V&AC, Krishnagiri Dist.